# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை – ஆண்டு IV, 2016/2017

## சுற்றாடற் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

1. தூய காற்று, தூய நீர் மற்றும் இயற்கையின் ஏனைய காரணிகள் மானிட கௌரவத்தையும் அடியத்திவாரமாக அமைந்த மனித உரிமைகளையும் பாதுகாப்பதற்கு அதிகம் பங்களிப்பைச் செய்கின்றன. இயற்கைக்கும் மனித உரிமைகளுக்கும் இடையிலான உறவை அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகளின் பின்னணியில் நுணுக்கமாக ஆய்ந்துரைக்க.

2. மீதோட்டபோர் என்பது இந்து சமுத்திரத்திலுள்ள தீவாக அமைந்த அரசொன்றாகும். அதனது தலைநகரில் இடம்பெற்ற பாரியதொரு குப்பைமேட்டு சரிவின் பின்னர், மீதோட்டபோர் அரசாங்கமானது அதனது தலைநகரை அடுத்துள்ள சதுப்பு நிலமொன்றில் குப்பைகளைக் குவிக்கின்றது. அச் சதுப்பு நில பிரதேசத்தில் பூர்வீக சமூகமொன்று 2000 ஆண்டுகளிற்கு மேலாக வாழ்ந்து வருகின்றது. அச் சமூகமானது அந்த சதுப்பு நிலத்திலுள்ள நீரானது தெய்வீக சக்தியுள்ளதென நம்புவதுடன் அச் சமூகத்தின் விதவைகள் அச் சதுப்பு நிலத்தின் வெவ்வேறு பிரதேசங்களில் ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் தீர்த்தச் சடங்கொன்றையும் நிறைவேற்றுகின்றனர். பௌர்ணமி தினங்களில், அச் சமூகமானது சதுப்பு நிலத்திலுள்ள பறவைகளுக்கு உணவளிப்பதுடன், அது அயல் நாடுகளிலிருந்தான அழிந்துவரும் இனங்கள் உட்பட பறவைகளைக் கவருகின்றது. அரசாங்கமானது அதிகளவு டைனமைற் இனைப் பயன்படுத்தி அந்த சதுப்பு நில பிரதேசத்தில் பெரியளவில் கற்குழியகழ்வு நடவடிக்கையையும் ஆரம்பித்துள்ளது. மீதோட்டபோர் அரசாங்கமானது நாட்டிலுள்ள எந்தவொரு சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளுக்கும் அமைய செயற்படவில்லை.

   மீதோட்டபோரானது சுற்றாடற் பாதுகாப்பு தொடர்பான எல்லா முக்கிய சமவாயங்களினதும் அரச திறத்தவரொன்று எனவும் மீதோட்டபோர் இனது சட்டமுறைமையானது இலங்கையின் சட்டமுறைமையைப் போன்றதெனவும் கருதுக.

   மேலுள்ள சூழ்நிலையில் எந்தளவிற்கு சர்வதேச சமவாயங்களிலுள்ள கோட்பாடுகள் (principles) மற்றும் தேசிய சட்டவாக்கம் / சட்டவாக்கங்களின் ஏற்பாடுகள் மீறப்படுகின்றன என ஆராய்க.

3. சுற்றாடற் சட்டத்தின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ள பிரிவுகளில் ஒன்றாக குற்றவியற் சட்டத்தின் பொருளளவிலான மற்றும் நடபடி விடயங்கள் உள்ளன.

சுற்றாடற் சட்டத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த மற்றும் அதிகரிக்க குற்றவியற் சட்டத்தின் பிரயோகத்தின் பயனுறுதியாந்தன்மையை உதாரணங்களுடன் ஆராய்க.

4. (அ) கடற் தீழ்ப்புத் தடுப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் தொடர்புறுத்தி இச் சட்டமானது கடற் தீழ்ப்பைத் தடுப்பதற்கான போதுமானளவு பொறுப்புடைமைகளை கப்பல்களின் சொந்தக்காரர்கள் மீது சுமத்துகின்றதா என ஆராய்க.

(ஆ) போற்சிற்றிபோர் என்பது இந்து சமுத்திரத்திலுள்ள தீவாக அமைந்த அரசொன்றாகும். போற்சிற்றிபோர் இனது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையானது ஷங்காய் ஓஷன் பில்டேர்ஸ் என அழைக்கப்படும் வெளிநாட்டு கம்பனியொன்றுடன் ஓஷன் போற் அப்பாற்மென்ற்ஸ் எனப் பெயரிடப்பட்ட 750 ஆடம்பர வீடுகளைக் கொண்ட வீடமைப்பு மாடிக்குடியிருப்பு ஒன்றை போற்சிற்றிபோர் இன் தலைநகரில் உள்ள துறைமுகப் பிரதேசத்தில் கரையோர வலயத்தினுள் நிருமாணிக்க உடன்படிக்கை ஒன்றில் ஈடுபட்டுள்ளது. கிடைக்கப்பெறக் கூடிய தகவலின்படி, அப் பிரதேசத்திலுள்ள முருகைக்கற்பாறைகள் மற்றும் தாவரவகைகள் அடையாளங் காணப்பட்ட இடங்களில் அகற்றப்பட்டுள்ளதுடன், அப் பிரதேசத்தை நிரப்புவதன் மூலம் காணி மீட்பானது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அக் கருத்திட்டமானது அப் பிரதேசத்திலுள்ள மீனவர்களின் மீன்பிடிச் செயற்பாடுகளையும் பாதிக்குமென நம்பப்படுகின்றது. உத்தியோகத்தரொருவர் அக் கருத்திட்டம் பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அறிந்திருக்கவில்லை என தெரிவிக்கின்றார்.

போற்சிற்றிபோர் இனது சட்ட முறைமையானது இலங்கையின் சட்டமுறைமையைப் போன்றதெனக் கருதுக.

காரணங்களைத் தந்து, மேலுள்ள சூழ்நிலையில் சட்ட ஏற்பாடுகளின் மீறுகைகளை ஆராய்க.

5. சர்வதேச சுற்றாடற் சட்ட ஆட்சிப்பரப்பின் பின்னணியில் இலங்கை சுற்றாடற் சட்ட ஆட்சிப்பரப்பு எந்தளவிற்கு நிலைபேண் அபிவிருத்தியை முன்னேற்றுகின்றது என்பதனை நுணுக்கமாக ஆய்ந்துரைக்க.

6. தாவர விலங்கு பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் நீள்தலைப்பானது பின்வருமாறு ஏற்பாடு செய்கின்றது:

**"இலங்கையின் தாவர விலங்குகளையும் அவைகளின் வாழிடங்களையும் பாதுகாப்பதற்கும் பேணுவதற்காகவும்: அத்தகைய தாவர விலங்குகளினதும்** அவைகளின் வாழிடங்களினதும் வர்த்தக மற்றும் ஏனைய துஷ்பிரயோகத்தை

தடுப்பதற்காகவும், இலங்கையின் பல்வகை உயிர்த்தன்மையை பேணுவதற்காகவும்...ஏற்பாடு செய்வதற்கான ஒரு கட்டளைச் சட்டம்." (வலியுறுத்தும் அடையாளப்படுத்தல் சேர்க்கப்பட்டுள்ளது.)

தாவர விலங்கு பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் தொடர்புறுத்தி இக் கட்டளைச் சட்டமானது இலங்கையில் தாவர விலங்குகளினதும் அவைகளது வாழிடங்களதும் பாதுகாப்பு மற்றும் பேணுகைக்காக போதியளவு ஏற்பாடு செய்கின்றதா என ஆராய்க.

7. ஹென்றி என்ற கோடாதிபதியான நன்கறியப்பட்ட தொழில்முயற்சியாளர் ஒருவர் பெருந்தெருவொன்றிற்கான பாரியளவிலான அபிவிருத்தித் திட்டமொன்றில் இலங்கையில் முதலீடு செய்ய கருதுகின்றார்.

இலங்கையில் அக்கருத்திட்டத்தின் அங்கீகாரத்திற்கான நடபடிமுறை தொடர்பான பொருத்தமான சட்டவாக்கத்தின் / சட்டவாக்கங்களின் ஏற்பாடுகளை தீர்க்கப்பட்ட வழக்குகளின் பின்னணியில் விளக்குக.

*****